**மத்திய சுற்றாடல் அதிகாரசபை - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிலையம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு**

-----------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகாரசபையின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகாரசபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின்

தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது அதிகாரசபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இற்கு முரணாக அறிக்கையிடப்பட்ட திகதியின் பின்னர் 12 மாதங்களுக்குள் தீர்வையாவதற்கு உள்ள ரூபா 9,960,000 பெறுமதியான திறைசேரி உண்டியல்களின் முதலீடு நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | திறைசேரி உண்டியல்கள் தீர்வு செய்வதற்கு எதிர்பார்க்கப்படாமையால் நடைமுறையல்லாத சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தன. | ஓராண்டிற்காக முதலீடு செய்யப்பட்டுள்ளதால் நடை முறைச் சொத்துக்களாக காண்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிளிசரு செயற்திட்டத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,708,236 தொகையான கட்டிட வாடகை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நடைமுறை வேலை மற்றும் வழியில் இருப்பு ரூபா 20,173,651 ஆன நடைமுறையல்லாத சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் நடைமுறை வேலை மற்றும் வழியில் இருப்பு என்பவற்றிற்காக 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 1,549,579 தொகை மீளாய்வாண்டின் கொடுக்கல் வாங்கலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | வழியில் இருப்பு நடை முறையல்லாத சொத்துக்கள் அல்லாமையால் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நடைமுறைச் சொத்துக்கள் தனமையான கொடுக்கல் வாங்கலாக இருப்பதால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் நிதி கூற்றுக்களில் நில நிரப்பல் மற்றும் கொம்போஸ்ட் வருமானம் முறையே ரூபா 7,261,920 குறைத்தும் ரூபா 8,432,981 கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | வகைப்படுத்தல் தவறொன்று இடம்பெற்றுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2008 - 2006 காலப்பகுதிக்கான நிலுவை ஊழியர் சேமலாப நிதி பங்களிப்பு கொடுப்பனவிற்காக அதிகாரசபையால் ரூபா 15.5 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அது கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை தொடர்பாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதாக சுட்டிக் காண்பிக்கின்றேன். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | இலத்திரனியல் தபால் சேவைக்காக வருடாந்தம் செலவிடப்பட்டிருந்த ரூபா 2,422,437 செலவினமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யும் போது சரி செய்யப்படும் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்குரிய ரூபா 5,014,503 மொத்தக் கிரயமான 03 ஒக்சிஜன் சிலின்டன் ரெகியுலேட்டர் பொருத்தப்பட்ட வாகனம் அதிகாரசபையின் ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இவ்வாகத்திற்குரிய ரூபா 4,642,740 ஆன பெறுமானத்தேய்வு அதிகாரசபையின் செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யும் போது சரி செய்யப்படும் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | திண்மக்கழிவுப்பொருள் வெளியேற்றல் வசதிகள் நிர்மாண செயற்திட்டத்தின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டில் ரூபா 1,021,249 இற்கு கொள்வனவு செய்த 04 மடிக் கணனிகள் 04 டெஸ்க்டொப் கணனிகள் | கணக்கீடு செய்தல் தவறொன்றாகும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் 04 யூபிஎஸ் என்பன மீளாய்வாண்டின் சொத்துக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2019 ஆம் ஆண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த மேற்குறித்த கொடுப்பனவு போலியாக பணக் கொடுக்கல் வாங்கலொன்று மேற்கொள்ளாமல் வங்கி மீதியில் கழித்து காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கி மீதி மேற்குறித்த பெறுமானத்தால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஏ) | பிளிசரு செயற்திட்டத்திற்குரிய ரூபா 1,322,307 ஆன வேறு வருமானம் நிதிச் செயலாற்றல் கூற்றினுள் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2,468,566 தொகையான செலுத்த வேண்டிய செலவினமாக இனங்காணப் பட்டிருக்கவில்லை. அவ்வாறான இச்செயற்திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,434,630 தொகையான 97 கழிவ்புபொருள் தொட்டிகள் எஞ்சிய இருப்பாக நிதிக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்கிடல் தவறொன்றாகும். | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு கையளிக்கப்பட்ட ரூபா 903,939 கிரயத்திலான மோட்டார் சைக்கிள் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யும் போது சரி செய்யப்படும் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் | சட்ட அதிகாரங்களின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அதிகாரசபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.<br><br>i. கழிவுப்பொருள் முகாமைத்துவத்தை முறைப்படுத்தல்.<br><br>ii கழிவுகள், தயாரிக்க முடியாத மலம் மற்றும் விஷ இரசாயன பொருட்களை வெளியேற்றுவதை தவிர்த்தல். | சட்டத்தை திருத்தம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | iii கழிவுப் முகாமைத்துவத்தினூடாக உருவாகும் உப விளைவொன்றான கொம்போஸ்ட் உர உற்பத்தி மூலம் இரசாயன பசளைப் பயன்பாட்டை குறைப்பது தொடர்பாக முன்னுரிமை வழங்குதல். | | |
| | | iv நகர கழிவுப் பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தலும் ஒழுங்குபடுத்தலும். | | |
| | | v பொது போக்குவரத்து முறைமைகள் செயற்படுத்தும் போது ஏற்படும் சுற்றாடல் தாக்கத்தை ஒழுங்குபடுத்தல். | | |
| | | vi பின்பாவனை பிளாஸ்ரிக் கழிவுப்பொருள் முகாமைத்துவ தேசிய செயற்திட்டத்தை செயற்படுத்துதல். | | |
| (ஆ) | 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | தீவு முழுவதும் காணப்படும் தொலைத்தொடர்பு மற்றும் தொலைக்காட்சி சேவைகள் என்பவற்றிற்காக வசதிகளை வழங்கும் தொடர்பாடல் கோபுரங்களின் எண்ணிக்கை 9291 ஆக இருந்த போதிலும் அதில் அனுமதப்பத்திரங்கள் பெற்று செயற்படுத்தும் கோபுரங்களின் எண்ணிக்கை 3,561 ஆக இருந்தது. அதில் 5,730 கோபுரங்களுக்காக அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் அது 62 சதவீதமாக இருந்தது. | 06 மாத காலங்களுக்குள் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். |
| (இ) | 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | வைத்திய ஆய்வுகூட அறிக்கைகள் மற்றும் ஆராய்ச்சி நிலையங்களும் உட்பட சுகாதார சேவை நிறுவனங்களிலிருந்து உருவாகும் உயிரியல் மருத்துவ மற்றும் சுகாதார சேவை கழிவுகளை வெளியேற்றும் நிறுவனங்கள் கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கான அனுமதிப்பத்திரங்கள் எடுக்கப்பட வேண்டிய போதிலும் சுகாதார அமைச்சின் கீழ் | சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்துக் கொள்கின்றேன் | சட்டரீதியான நடவடிக்கைகளை துரிதப்படுத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயற்படும் 613 வைத்தியசாலைகளில் 60 வைத்தியசாலைகள் மாத்திரமே அனுமதிப்பத்திரங்களை பெற்றிருந்தன. | | |
| (ஈ) | 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவு | 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கைகள் 2019 ஏப்ரல் அளவிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | குறித்த அறிக்கைகள் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளன. | ஆண்டறிக்கை உரிய காலப்பகுதியில் பாராளுமனற்த்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | 2008 நவம்பர் 24 ஆந் திகதிய சீஎம்எஸ்/ஈ/ 03/ஜேசீஆர்/ எம்எஸ்சீசீ ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | ஜேஎம் 12 தொகுதியில் உள்ளடக்கப்பட்டிருக்கையில் 106 உத்தியோகத்தர்களுக்கு சரியான சம்பள அளவில் வைக்கப்படாத காரணத்தினால் நிலுவைச் சம்பளமாக ரூபா 6,376,837 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன் | கூடிய விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஊ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>-------------------------------------- | | | |
| i | நிதிப் பிரமாணம் 371(2)(ஈ) | பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் உரிய செயற்பாடு முடிவுற்ற உடனே தீர்வு செய்யப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 37 சந்தர்ப்பங்களில் ரூபா 633,468 ஆன முற்பணங்களை தீர்வு செய்வதற்கு ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. | இவ்வாறான செயற்பாடுகளை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| ii | நிதிப் பிரமாணம் 371(4) | அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு 185 சந்தர்ப்பங்களில் ரூபா 3,836,727 ஆன முற்பணம், தேவைப்பாட்டை மிகைத்து வழங்கப்பட்டிருந்தது. பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணத்தை உரிய செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படாமல் முழுக் கட்டுநிதியும் மீண்டும் நிரப்பிய 17 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | இவ்வாறான செயற்பாடுகளை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (எ) திண்மக்கழிவுப்பொருள் வெளியேற்று வசதிகள் நிர்மாணச் செயற்திட்டம் | | | |
| 2019 பெப்பரவரி 12 ஆந் திகதிய அமைப/19/0392/ 104/026 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | இச்செயற்திட்டத்தின் காலப் பகுதியை நீடிப்பதற்கும் செயற்திட்டத்தின் இடங்களையும் மாற்றுவதற்குரிய கடன் உடன்படிக்கையை திருத்தம் செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய திருத்தங்கள் நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட இடங்களை மாற்றுவதற்குரிய திருத்தங்கள் பொது திறைசேரியினால் தற்போது மேற்கொள்ளப் பட்டுள்ளது. | உதவிகள் பெற்றுக் கொள்ளப்பட்டு செயற்படுத்தப்படும் செயற்திட்டமொன்றாக இருப்பதால் உடனடியாக செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 44,508,000 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதனேடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 17,966,000 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 26,542,000 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு மொத்த வருமானம் ரூபா 148,216,000 அதிகரித்திருந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடல் நீரினால் சேதமுற்ற காரணத்தினால் பிளிசறு செயற்திட்டத்திற்குரிய ஓட்ட நிலையிலிருந்து அகற்றியிருந்த மோட்டார் வாகனம் ஒன்று 07 வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன், செயற் திட்டத்தின் அடிப்படை நோக்கங்களிலிருந்து விலகி 05 வேறு செயற்பாடுகளுக்கு ரூபா 3,922,317 தொகை செலவிடப்பட்டிருந்தது. | இது தொடர்பாக வழக்கொன்று காணப்படுவதுடன் எதிர்காலத்தில் நோக்கங்களின் பிரகாரம் செயற்படுவதாக தெரிவித்துக் கொள்கின்றேன். | குறித்த நடவடிக்கையை துரிதப் படுத்த வேண்டியதுடன் நோக்கங்களுக்கு புறம்பாக நடவடிக்கை எடுகக்க கூடாது. |

## 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்ட தொடர்பாடல் கோபுரங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக ஊக்குவிப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை | தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவிடமிருந்து உரிய தகவல்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் இச்செயற்பாட்டுடன் இணையக்கூடியதாக உள்ளது. | துரிதமாக செயற்பட வேண்டும். |

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றாடல் ஆபத்து பிரதேசங்களில் உயிரியல் பல்வகைத்தன்மை பாதுகாப்பினை மேம்படுத்துதல் மற்றும் சுற்றாடல் முறைமை சேவைகள் பராமரிப்பு செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக மஹவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட ரூபா 1,583,590 தொகையில் ரூபா 1,447,890 தொகை பயன்படுத்தாமல் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | புலனாய்வு நடவடிக்கைகளின் போது எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின் பிரகாரம் தற்காலிமாக பிற்போடப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 07 பழைய மோட்டார் வாகனங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் முன்னைய 05 ஆண்டுகளில் வாகனப் பராமரிப்பு மற்றும் திருத்தங்களுக்காக மாத்திரம் ரூபா 5,251,782 செலவிடப்பட்டிருந்தது. | தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | துரிதமாக கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.5 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் 33,536,000 ஆன ஐக்கிய அமெரிக்க டொலரிலான பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கொரியா கடன் உதவியின் கீழ் செயற்படும் திண்மக் கழிவுப்பொருள் அகற்றும் வசதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் 2015 ஜூன் 29 திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டிருந்த போதிலும், 2019 மே வரையிலும் செயற்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் அலுவல்கள் மாத்திரம் பூர்த்தி செய்திருந்ததுடன் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2021 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் உரிய கடன் மற்றும் வட்டி என்பன 10 வருட சலுகைக் காலத்தின் பின்னர் வருடாந்த வட்டி 0.15 சதவீதப்படி 40 வருடங்களில் செலுத்தி முடிக்க வேண்டியதுடன் இந்த செயற்திட்டத்தின் கருமங்களை ஆரம்பிப்பதில் நீண்ட கால தாமதம் காணப்பட்டமையால் பெற்றிருந்த கடனை தீர்ப்பதில் பாரிய அளவிலான நிதிசார் பிரதிகூலங்கள் ஏற்படுவது தொடர்பாக அதிகாரசபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 5½ ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 04 நில நிரப்புதல்கள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் ஆரம்ப நோக்கங்களிலிருந்து செயல்நடவடிக்கைத் திட்டத்திலிருந்தும் விலகி ஊடகவியலாளர்களின் செயலமர்வு ஒன்றிற்காக ரூபா 192,800 செலவிடப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு அமைச்சரவை நியமித்த நிலையான பெறுகை குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அத்தீர்மானத்தின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | கடன் உதவி அடிப்படையில் செயற்திட்டம் செயற்படுவதால் செயற்திட்ட வேலைகள் துரிதமாக ஆரம்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அதிகாரசபையின் மூலம் செயற்படுத்தப் படும் பிளிசறு திட்டத்தின் 2008 முதல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான நிதிச் செயன்முன்னேற்றம் 47.29 சதவீதமாக இருந்ததுடன் சேமிப்பு தேறிய நிதிஏற்பாட்டில் 52.71 சதவீதமாக இருந்தது. 2007 திசெம்பர் 14 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் 08 பிரதான நோக்கங்களில் 03 நோக்கங்கள் செயற்படுத்தப்படாதிருந்ததுடன் | காணப்படும் சட்ட நிலைமையில் செயற்படுத்த முடியாத நிலைமை உருவாகிய காரணத்தினால் குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. | செயற்திட்ட திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் |

செயற்திட்டத்தினால் 139 கொம்போஸ்ட் பிரிவுகள் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அதில் 33 பிரிவுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதில் 14 செயற்படாத நிலைமையிலும் 03 பிரிவுகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டும் சட்ட காரணங்கள் அடிப்படையில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படாத 02 பிரிவுகளும் நிர்மாணிக்கப்பட்டு வரும் 12 பிரிவுகளும் நிர்மாண வேலைகள் இடம்பெறாத 02 பிரிவுகளுமாக இருந்தன.

### 3.6 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் பெறுகை திட்டமொன்று தயாரித்து ஆகக் குறைந்தது 03 வருட காலப்பகுதிக்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை செயற்பாடுகள் பெறுகை திட்டத்தில் பட்டியலிடப்பட்டு அத்திட்டம் வழிகாட்டியின் 4.2.1 இல் குறிப்பிடப்பட்ட மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பரிகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடங்களுக்காக தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக தெரிவித்துக் கொள்கின்றேன. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.7 ஏனைய அமைப்புகளின் வளங்களை பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகாரசபைக்கு உரித்தற்ற காணி யொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரங்தெனியா சொபாகெத நிலையக் கட்டிடத்தை திருத்துவதற்காக ரூபா 2,141,641 மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்த போதிலும் அக் காணியை கையேற்பதற்கு அல்லது கணக்குளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணியின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கபட வேண்டும். | கையேற்பதற்கு துரிமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வருடாந்தம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்ட போதும் அக்குழுவின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்துவது மந்தகெதியில் காணப்பட்டது. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை துரிதமாக செயற்படுத்த வேண்டும் |

### 4.2 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சுகாதார அமைச்சு மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களில் ஒத்துழைப்புடன் கழிவுப் பொருள் முகாமைத்துவத்தின் ஊடாக சுற்றாடல் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி சட்டங்கள், விதிகள் பிரமாணங்களின் பிரகாரம் பேணிச் செல்வதற்காக நிறுவனத்தை செயற்படுத்துவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அதற்காக கூடுதலான கவனமொன்று செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் சட்டத்தின் கீழ் சட்டங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும் | துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) நிர்வாகத்திற்காக வரையரைகள் பிரசித்தப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த எல்லைகள் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நிர்வாகத்திற்காக தேவையான ஆலோசணைகளை சனாதிபதி செயலாளரினால் மோட்டர் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | உரிய கட்டுப்பாடுகள் துரிதமாக செயற்படுத்தப்பட வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்துகொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உரிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் மற்றும் அடையப்பட வேண்டிய மைல்கல் இனங்காணப்பட்டிருந்த போதிலும் சில செயற்பாடுகள் வர்த்தமானியில் வெளியிடுவதற்காக வரிசைப்படுத்தல், பரீட்சாத்த செயற்திட்டமாக செயற்படுத்தும் செயற்பாடுகளுக்காக நிதிஏற்பாடு கிடைக்காத காரணத்தினால் நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் இதுவரை செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக உரிய இலக்குகளை பூரணப்படுத்த வேண்டும். |